# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்புத்துறை
திண்டுக்கல்உள்ளூர் திட்டக்குழுமம்,
உறுப்பினர் செயலர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்-திரு. ஆ.முத்துகிருஷ்ணன், பி.இ.,

ந.க.எண்-1407/2020/திமா2. நாள்-08.10.2020.

பொருள் : குடியிருப்பு மனைகள் உட்பிரிவு - திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமப் பகுதி - திண்டுக்கல் மாவட்டம் - திண்டுக்கல் மேற்கு வட்டம் - திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் - செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி கிராமம்- சர்வே எண்கள்- 498/6B1,7,8B1 மற்றும் 9A2, -ல் 1284.87ச.மீ (31.75 செண்ட்) பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைகள் உட்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி - வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1) மனுதாரர் திரு.K.சிவகுமார். திண்டுக்கல் என்பவரது இணையதள விண்ணப்ப பதிவு எண்-6738. நாள்-23.08.2020.
2) மனுதாரர் திரு. K.சிவகுமார். திண்டுக்கல் என்பவரது விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள்-21.08.2020. (கூடுதல் விபரங்கள் பெறப்பட்ட நாள் 04.09.2020 மற்றும் 14.09.2020)
3) அரசாணை எண்-18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை. நாள்-04.02.2019.
4) மாவட்ட ஆட்சியர். திண்டுக்கல் மாவட்டம் அவர்களின் குறிப்பு ஒப்புதல் நாள்-26.09.2020.
5) நகர் ஊரமைப்பு ஆணையர். சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-4367/2017பிஏ-2. நாள்-07.03.2019.
6) நகர் ஊரமைப்பு ஆணையர். சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-13686/2017எல்ஏ-2. நாள்-08.09.2017.
7) நகர் ஊரமைப்பு ஆணையர். சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-12201/2017சிபி. நாள்-28.09.2017.
8) தலைவர். செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி அவர்களது கடிதம் ந.க.எண்-02/2020 செ.ஊ. நாள்-28.09.2020. தீர்மானம் எண்- 667. நாள் 23.09.2020 (குடியிருப்பு மனைகள் உட்பிரிவு மூலைமுடக்கு பரப்பினை ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தான பத்திர ஆவண எண்-4946/2020. நாள்-25.09.2020)
9) மனுதாரர் திரு. K.சிவக்குமார். திண்டுக்கல் என்பவரின் கடிதம் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்பட்டு இணைப்புகள் பெறப்பட்ட நாள்-09.09.2020 மற்றும் 07.10.2020.

**உத்தரவு**

திண்டுக்கல் மாவட்டம் - திண்டுக்கல் மேற்கு வட்டம் - திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் - செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி கிராமம்- சர்வே எண்கள்- 498/6B1,7,8B1,9A2, -ல் 1284.87ச.மீ (31.75 செண்ட்) பரப்பளவுள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைகள் உட்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/திஉதிகு எண்.07/2020** என எண்ணிடப்பட்டு.

....2

K. Sivakumar

தொழில்நுட்ப அனுமதியும் மேற்படி உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவு 49-ன்கீழ் மற்றும் பார்வை(4)-ல் கண்ட அரசாணையின். விதி(4)-ன்படியும் **திட்ட அனுமதி எண்.10/2020** என எண்ணிடப்பட்டு. கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் இத்துடன் இணைக்கபட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் வழங்கப்படுகிறது.

மேற்படி உத்தேச மனைப்பிரிவிற்கு பார்வை(3)-ல் கண்டுள்ள அரசாணையின்படி. தலைவர். செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி அவர்களிடம் இருந்து மனுதாரர் மனைகள் உட்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**சிறப்பு நிபந்தனைகள் :-**

1) நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.

2) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

3)பார்வை 6-ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, "உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலைப்பகுதிகளை மனுதாரர் சொந்த செலவில் வருவாய் உட்பிரிவு செய்து, அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே, உள்ளாட்சியால் மனைகள் உட்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்".

4)பார்வை 7-ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, "The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamilnadu Real Estate ( Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate project or part of it only after registering the real estate Project with the Real Estate Regulatory Authority".

5) தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்-2019, விதி எண்.47(11)-ன்படி, மனைப்பிரிவில் / மனைகள் உட்பிரிவில் தேவைப்படும் சாலை, குடிநீர் வசதி, வடிகால் வசதி, கழிவுநீர் வசதி மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்துதல்/ மேம்படுத்தலுக்காக உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மதிப்பீடு செய்யப்படும் செலவுத்தொகையினை மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

6) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலினைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனைகள் உட்பிரிவுக்கு ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு / மனைகள் உட்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு / மனைகள் உட்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

...3

K. Sekhar

(13)

- 27 -



மேற்படி சிறப்பு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைகள் உட்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர்,
திண்டுக்கல் உள்ளூர்த் திட்டக்குழுமம்,
திண்டுக்கல்.

8/10/2020

**இணைப்பு**

அங்கீகரிக்கப்பட்ட மனைகள் உட்பிரிவு வரைபடங்கள் - 2
மனைப்பிரிவு நிபந்தனைகள் - 2

**பெறுநர்**

தலைவர்,
செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி
திண்டுக்கல்.

**நகல்** (உள்ளாட்சி மூலம்)
திரு.K.சிவக்குமார்,
கதவு எண்.2,
கச்சேரி தெரு,
திண்டுக்கல்-624 003.

## செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

**ஆணை பிறப்பிப்பவர் :** திருமதி.**க.லதா**.,M.Com.,B.Ed.,M.Phil.,

**ந.க.எண் : 02 / 2020/ செ.ஊ** **நாள் : 13.10.2020**

**பொருள் :** மனைப்பிரிவு - திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் - செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி - திண்டுக்கல் வட்டம் - சர்வே எண் 498/6B1,7,8B1,9A2-ல் 1284.87 ச.மீ (31.75 செண்ட்) - குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் - நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49ன் கீழ் திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமத்தால் திட்ட அனுமதி வழங்கப்பட்டது - மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி ஆணையிடல்.

**பார்வை :**

1. மனுதாரர் திரு. **K.சிவக்குமார்**, திண்டுக்கல். என்பவரது இணையதள விண்ணப்ப பதிவு எண்: 6738 நாள்: 23.08.2020.
2. மனுதாரர் திரு. **K.சிவக்குமார்**, திண்டுக்கல். என்பவரது விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள்: 21.08.2020. (கூடுதல் விபரங்கள் பெறப்பட்ட நாள் : 04.09.2020 மற்றும் 14.09.2020)
3. அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்: 31.01.2020.
4. மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மாவட்டம். அவர்களின் குறிப்பு ஒப்புதல் நாள்: 26.09.2020.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண் 4367/2017பிஏ-2, நாள்: 06.11.2019 மற்றும் 05.02.2020.
6. நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண் - 13686/2017எல்ஏ-2, நாள்: 08.09.2019.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண் - 12201/2017சிபி, நாள்: 28.09.2017.

K. Sivakumar

(20)

8. உறுப்பினர் செயலர் , திண்டுக்கல் உள்ளூர் திட்டகுழுமம் , கடிதம் ந.க.எண்-1407/2020/தி.மா.2, நாள்: 08.10.2020.

9. தலைவர், செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி/ கிராமம் அவர்களின் கடிதம் ந.க.எண்: 02/2020/செ.ஊ, நாள்: 11.09.2020.

10. தீர்மான எண்: 667, நாள்:23.09.2020.(குடியிருப்பு மனைகள் உட்பிரிவு மூலைமுடக்கு பரப்பினை ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தான பத்திர ஆவண எண்: 4946/2020, நாள்: 25.09.2020

11. மனுதாரர் திரு.K.சிவக்குமார், திண்டுக்கல் என்பவரது கடிதம் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்பட்டு இணைப்புகள் பெறப்பட்ட நாள்: 09.09.2020 மற்றும் 07.10.2020.

---

**ஆணை**

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், திண்டுக்கல் வட்டம், செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி / கிராமத்திற்குட்பட்ட சர்வே எண்: 498/6B1,7,8B1,9A2 ஆகியவற்றில் அமையும் 1284.87 ச.மீ பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு பார்வை (3) கண்டுள்ள அரசாணைகளின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை (4)ல் கண்டுள்ளவாறு தலைவர் / மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கிய ஒப்புதலின் அடிப்படையில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு பார்வை (8)ல் காணும் திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழும நடவடிக்கை கடிதத்தில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் ம.வ./தி.உ.தி.கு. எண். **07/2020** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

**மனைபிரிவு நிபந்தனைகள்**

1. I. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் -2019-ல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும். எனவே பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றிட வேண்டும்.

K-Sivkumar

II. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ/திஉ.திகு.எண்:07/2020 என எண்ணிடப்பட்டு வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் அமையும் தெருக்கள் அனைத்திற்கும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்-2019இ விதி 47(11)-ன் படி மனைப்பிரிவில் தேவைப்படும் சாலை, குடிநீர் வசதி , வடிகால் வசதி , கழிவுநீர் வசதி மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்துவதற்கு உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மதிப்பீடு செய்யப்படும் செலவுத் தொகையினை மனுதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

III. மேற்படி மனைகள் உட்பிரிவு சாலைகள் ஒதுக்கப்பட்டிருப்பின் அவ்விடத்தினை உள்ளாட்சிக்கு தான ஆவணம் மூலம் ஒப்படைப்பு செய்து அவைகளை நில அளவை செய்து உட்பிரிவு செய்வதற்கான செலவு/ கட்டணத் தொகையினை மனுதாரரிடமிருந்து உள்ளாட்சி பெற்றுக்கொள்ள வேண்டும்.

IV). திண்டுக்கல் உள்ளூர் திட்டக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறான மனையின் அளவுகள் சாலையின் அமைப்புகள் அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டு திண்டுக்கல் உள்ளூர்திட்டக் குழுமத்தின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

V). இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்பட வேண்டும்.

2. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

3. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதில் கடை, பண்டக சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது உபயோகத்திற்காக தெரிவு செய்யப்படுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

K-Sr...

இ) 1984 -ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 மற்றும் நில உச்ச வரம்பு சட்டம் 1978 மற்றும் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பாக உள்ளாட்சி மற்றும் மனுதாரர்கள் அளித்த உறுதிமொழியின் பேரில் மனைப்பிரிவு ஒப்பதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே இம்மனைப்பிரிவிற்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உட்படின் அதற்கு மனுதாரரே பொறுப்பாவார்.

ஈ) மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது நிர்வாக அதிகாரியின் அங்கீகார நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

உ) மேலும் . மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்மந்தமாக நில ஆர்ஜிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதை உறுதி செய்து மன நிறைவு அடைந்த பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

14. மனுதாரர் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

15. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி உள்ளாட்சி அலுவலர் வழங்கிய சான்றினை ஏற்று நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

16. நில உரிமை குறிந்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பொது மக்களுக்கோ அல்லது சுற்றுச்சார்பு சூழலுக்கோ பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

K. Sivakumar

17. உள்ளாட்சி அதிகாரியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்றும் நிபந்தனை படிவம் ஒன்றும் சம்மந்தப்பட்ட பதிவுத்துறை அலுவலருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி அதிகாரியை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

18. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு. நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

19. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 1.8 மீ x 1.2 மீ அளவிலான நிரந்தர அறிவிப்பு தகவல் பலகை பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுவப்பட வேண்டும்.

20. மனைப்பிரிவில் அமையும் மனைகளில் குடியிருப்பு கட்டிட அபிவிருத்தி அடையும் பொழுது கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் கழிவுநீர் ஆகியவைகள் அருகில் உள்ள நிலங்களில் கலக்காவண்ணம் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளின்படி திண்டுக்கல் வட்டம், செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி / கிராமத்திற்குட்பட்ட சர்வே எண்:498/6B1,7,8B1,9A2-ல் அமையும் 1284.37 ச.மீ பரப்பில் மனைப்பிரிவு அமைக்கப்பட்ட மனைப்பிரிவு நிலத்தினை குடியிருப்பு மனைகளாக வரன்முறைப்படுத்துவதற்கும் ,

குடிநீர் மற்றும் தெருவிளக்கு வசதிகள் மேற்கொள்ள அபிவிருத்திக் கட்டணமாக ரூ.64500/- மற்றும் ஆய்வுக் கட்டணமாக ரூ.1000/- மொத்தம்- ரூ.65500/- (ரூபாய் அறுபத்து ஐந்தாயிரத்து ஐநூறு மட்டும்) ஊராட்சியில் இரசீது எண்: 12225 நாள்: 12.10.2020-ல் சம்பந்தப்பட்ட நில உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரால் சாலை வசதி மற்றும் கழிவுநீர் ஓடை வசதி செய்யப்பட்டுள்ளது.

அரசாணை எண்-18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை, நாள்: 04.02.2019 விதி 47(6)-ன் படியும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை. அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:- 4367/2019 பிஏ2, நாள்: 05.02.2020-ன் படியும் பூங்கா ஒதுக்கீட்டிற்கான உரிய தொகையினை மனுதார் உரிய அரசு கணக்கில் செலுத்தியுள்ளார். உத்தேச மூலைமுடக்கு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் திண்டுக்கல் வட்டம், செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி/ கிராமத்திற்குட்பட்ட சர்வே எண்: 498/6B1,7,8B1,9A2-ல் அமையும் 1284.87 சமீ பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு பார்வை (3)ல் கண்டுள்ள அரசாணைகளின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு பார்வை (4)ல் கண்டுள்ளவாறு தலைவர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திண்டுக்கல் உள்ளூர் திட்டகுழுமம் அவர்கள் ஒப்புதல் பெற்று ஊராட்சி மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு பார்வை (8)-ல் காணும் திண்டுக்கல் உள்ளூர் திட்டகுழுமத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் பேரில் அமைக்கப்பட்டுள்ள 08 மனைப்பிரிவுகளுக்கு (மனை எண். 1 முதல் 08 வரை) இறுதி ஒப்புதல் வழங்கி மனைப்பிரிவாக வரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தலைவர்
செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி
திண்டுக்கல்.

பெறுநர்:

K.சிவக்குமார் ,
2, கச்சேரி தெரு,
திண்டுக்கல்.

13/10/20

நகல்

1. உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம் , திண்டுக்கல்.
2. இணை சார்பதிவாளர்-II, திண்டுக்கல்.

K. Sivakumar



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate